# இந்தியாவிலிருந்து சகல தமிழ்ப் போராளிகளும்

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 ஆனி 4 துல்ஹஜ் 5 இதழ் 127

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-06-1991

## வெளியேற்றப்படுவர் — ஜெயலலிதா

(சென்னை)

இந்திய மண்ணிலுள்ள சகல தமிழ்ப் போராளிகளும் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்களென அ. தி. மு. க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் படுகொலைகளை கண்டித்து இன்று ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் எதுவிதகாரணமும் இன்றி இரு பயிற்சி ஆசிரியர்கள் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டமையை கண்டித்தும் வங்காலை, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழ்ப்பொதுமக்களின் படு

[4ம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் 846 பேர் இருப்பதாக தகவல்

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் தற்போது 846 பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்விபரம் சிறிலங்காப் படையினர் திரட்டிய விபரத்திற்கு அமையவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ஐந்துக்கும் மேற்

(4ம் பக்கம் பார்க்க)

# ★ வவுனியா பகுதியிலிருந்து படை முன்னேறுவதை தடுக்க

# புலிகள் உக்கிரமான தாக்குதல்

## படையினரின் 4 உடல்களும் ஆயுதங்களும் மீட்பு

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் இருந்து வெளியேற முற்படும் சிறிலங்கா இராணுவத்தினரைப் பின்வாங்கச்செய்யும் விதத்தில், விடுதலைப் புலிகள் உக்கிரமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். சிறிலங்கா விமானப் படையின் விமானப் பாதுகாப்புடன் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதை அடுத்து, இராணுவம் நிலைகுலைந்து பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கியதாகத் தெரியவருகிறது.

வவுனியா மாவட்டத்தில் செங்கலடிப்புலவு என்னுமிடத்

(4-ம் பக்கம் பார்க்க)

அநுராதபுரம் பகுதி—

## தாக்குதலில் 5 ராணுவம் பலி 23 சிப்பாய்கள் படுகாயம்

(வவுனியா)

அநுராதபுரம் பகுதியில் வாகனத்தில் சென்ற படையினர் மீது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் 5 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர்

நேற்றுக்காலை வாகனமொன்றில் சென்று கொண்டிருந்த படையினர் மீது புலிகள் திடீர் தாக்குதலொன்றை மேற்

(4ம் பக்கம் பார்க்க]

## வீரமரணமடைந்த வேங்கைகள்

(வவுனியா)

வவுனியாப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் மோதலில் வீரமரணமடைந்த போராளிகள் விபரம் வருமாறு:

லெப். சுதா [நாகேந்திரன்-

(4-ம் பக்கம் பார்க்க)

## பி. வி. நரசிம்மராவ் புதிய பிரதமர்?

[லண்டன்]

இந்தியாவின் பத்தாவது தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றிபெறுவது உறுதியாகியிருக்கும் இவ்வேளையில் இந்தியாவின் புதிய பிரதமமந்திரியாக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் பி.வி. நரசிம்மராவ் பதவி ஏற்பார் என்று புதுடில்லியில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)



யாழ். முற்றவெளி மாவீரர் அரங்கில் 10-ம் நாள் முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன், திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரவி, வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ உரைநிகழ்த்துவதை படங்களில் காணலாம். (படங்கள் தேவா)

## வரி விளம்பரம்

**C C C**

Apprenticeship in Pharmacy வகுப்பு 26-06-91 சனிக்கிழமை தொடக்கம் C. C. C. கிளினிக்கில் நடைபெறவுள்ளது. கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், C, C. C. Clinic, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 1382)

**கர்க்கடகத்தில் நீசச்செவ்வாய் சஞ்சாரம்**

யுத்தச் செவ்வாய் வியாழனுடன் கர்க்கடகத்தில் நெருங்கும் போது சனியின் கெட்ட பார்வையால் யுத்தம் யூலை வரை தீவிரமடையும். ஆகஸ்ட் வியாழமாற்றத்தால் தணியும். Prof. சத்தியதாஸன், சித்தன் கேணி. (சி-4853)

**மணமகள் தேவை**

யாழ். இந்துப் பெற்றோர் லண்டனில் வசிக்கும் 32வயது Accountant மகனுக்கு லண்டன் அல்லது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-4863, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-4863)

**புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)**

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு Paper Class (புதிய பிரிவு) 19-06-91 புதன் பி. ப. 3-30 ஆரம்பமாகிறது. வகுப்புக்கள் சனி, ஞாயிறு 10-30—12-30 நடைபெறும். பரீட்சை 30-06-91 ஞாயிறு மு. ப. 8-00/ மு. ப. 10-00/ பி. ப. 1-00. 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம் பி.ப,4-00 மக்கள் வைத்தியசாலை முன்பாக, கொக்குவில் மேற்கில் நடைபெறும். (சி-4868)

# "தலைவர் 'பிரபா' தலைமையில் தமிழினம் விடுதலை பெறவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''தமிழ் ஈழத்தில் இலங்கை அரசின் ஆக்கிரமிப்பில் இருந்து குறிக்கப்பட்ட பிரதேசம் மீட்டெடுத்து இன்று முத்தமிழுக்கு விழா எடுக்கின்றோம். ஏனைய தமிழீழப் பிரதேசங்களும் விடுவித்தாக வேண்டும்

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழாவின் பத்தாவது நாள் நிகழச்சியில் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர்புதுவை இரத்தினதுரை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: முத்தமிழ் விழாவில் கலந்து கொண்ட இந்த மக்கள் வெள்ளத்தைக் கண்டு எங்களுக்கு புல்லரிக்கின்றது. நாங்கள் புளங்காகிதம் அடைகிறோம். ஒரு காலத்தில் இந்த முற்றவெளி மைதானத்தில் வெடிமருந்தின் நெடிலைத் சுவாசித்தோம்.

மக்கள் துன்பத்தை அனுபவிக்கக் கூடாதென்று இதற்கு முன்பு உங்களை முற்றவெளி மைதானத்துக்கு அழைக்கவில்லை. நாங்கள் இரண்டு தரம் இங்கு வந்திருக்கிறோம். ஒன்று மாவீரர்களின் தீபச்சுடர் ஏற்றுவதற்கு, மற்றது மாவீரர்களின் புகழுடம்புகளை எரிக்கவே வந்தோம். இன்று உங்களை அழைத்து முத்தமிழ் அமுதம் தொடுக்கின்றோம் என்றார்.

### தூயதமிழ் பிரயோகம்

வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் மனோ பேசுகையில் கூறியதாவது:-

விடுதலையோடு பின்னிப் பிணைந்தது கலை, பண்பாடு. முத்தமிழ் சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் வளர்ப்பதற்கு நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கின்றோம்.

தமிழீழம் மீட்கப்படும்வரை நாங்கள் ஓயமாட்டோம் என்று திடசங்கற்பம் எடுக்க வேண்டும்.

அத்தோடு தூய தமிழ் பிரயோகத்துக்கு முக்கிய இடம் கொடுக்கவேண்டும். யாழ். மாவட்ட தளபதி தினேஷ் பேசுகையில் கூறியதாவது:

போராளிகள் உங்கள் குழந்தைகள் உங்களுக்காகவே மடிகின்றார்கள். இதைப் பொதுமக்களாகிய நீங்கள் உணர்வதாக இல்லை. ஒவ்வொரு நாளும் குறைந்தளவு ஒரு போராளியாவது வீரமரணமடைகின்றான். அவனது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துகிறோம், வீரன் தன் உயிரை எதற்காக அர்ப்பணித்துள்ளான் என பொதுமக்களாகிய நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது எமது போராளிகளை ஒழித்துக்கட்ட முயற்சி எடுத்தது. இவ்வளவு சவால்களையும் சமாளித்து வீர வரலாற்றுச் சகாப்தத்தைப் படைத்தஎமது தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழினம் விடுதலை பெறவேண்டும்.

### கிராமப்பெயர் மாற்றம்

திருகோணமலை பொறுப்பாளர் ரவி கூறியதாவது;

திருகோணமலையை எதிரி அழிக்க எண்ணுகிறான். கொக்கட்டிச்சோலையில் இருநூற்றுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்களை இலங்கை இராணுவத்தினர் கொன்றனர். குளக்கோட்டான் என்ற கிராமத்தை கந்தளாய் என மாற்றி அமைத்தான். குமரேசன் கடவையை கோமரங்கடவல என்றும், முதலிக் குளத்தை மொரவெவ என்றும் மாற்றி தமிழ்மொழி, தமிழ்ப் பிரதேசங்களை கபளீகரம் செய்கின்றான்.

தலைவர் பிரபாகரன் தலைமையின்கீழ் எல்லோரும் ஆயுதங்கள் ஏந்தி எமது மண்ணைக் காப்போம், மீட்போம்.

### கோட்டையில் தமிழ்

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இராசன் பேசுகையில் கூறியதாவது: இந்த யாழ்ப்பாணக் கோட்டையில் முதலில் டச்சு மொழி, பின்பு ஆங்கிலம், சிங்களம், ஹந்தி ஆகியன அரசேறின. இன்று தூய தமிழ் வீசுகின்றது.

(4ம் பக்கம் பார்க்க)

### யாருடையது ?

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டியில் கடந்த 14ம்தேதி ஆர். ஹரிகரன் என்பவரால் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ ★

யாழ். முற்றவெளிமாவீரர் அரங்கில், கடந்த 16ம் தேதி இரவு கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்சி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## இராசி பலன்

**18-06-1991**

**செவ்வாய்க்கிழமை**

ஸப்தமி பி. இ.3.54வரை, பூரம் பி. இ. 2 44 வரை, இராகுகாலம் மாலை 2-53 முதல் 4.23 வரை, சுபநேரம் காலை 10.23 முதல் 11.53 வரை, சித்தாமிர்தயோகம்.

மேடம்: தவறானபோக்கு, மனவிகாரம், தொழில் பாதிப்பு.

இடபம்: வைத்தியச்செலவு, ஏமாற்றம், இனசனப்பகை.

மிதுனம்: பெரியோர்ஆசி, அதிக லாபம், தொழில் பயணம்.

கடகம்;இடையூறு, குடும்பப் பிரிவு, மனவெறுப்பு.

சிங்கம்: சுபசெய்தி, குடும்ப மகிழ்ச்சி, காரியவெற்றி.

கன்னி: குடும்பத்தில் வேற்றுமை, கடன்சுமை, ஆதரவின்மை.

துலாம்: காரியபலிதம்,விருந்தினர் வருகை, பணவரவு.

விருச்சிகம்:சகோதர உதவி, பொதுப்பணி, வாக்குவன்மை.

தனுசு; தொழில் கஷ்டம், மறைமுகத்தொல்லை, அதிக செலவு.

மகரம்: அலைச்சல், காரிய தாமதம், உடல் உபாதை.

கும்பம்: அதிகாரிகள் பாராட்டு, தொழில் மாற்றம், பயணம்.

மீனம்: பகைமை விலகுதல், புத்திரர் சிறப்பு, விருந்துபசாரம்.

- ஜோஸ்யர்

---

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

09-06-1991ல் பருத்தித்துறைக் கடலில் பயிற்சியின்போது மறைந்த மாவீரர்கள்

**மேஜர் டேவிட்**

**லெப். கரிகாலன்**

**லெப். ரமணன்**

**2-வது லெப். ரவி**

**2-வது லெப். மாணிக்கம்**

**2-வது லெப். சோகின்**

**வீரவேங்கை புலவர்**

ஆகிய விடுதலை வேங்கைகளுக்கு

# கண்ணீர் அஞ்சலியும் வீர வணக்கமும்

**வல்வை நண்பர்கள்**

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட் மேஜர் டேவிட்

(சி-4867)

## வட்டுக்கோட்டை

# அருள்மிகு விசாலாட்சி சமேத காசிவிசுவநாதர் (வீரபத்திர சிவபெருமான்) ஆலய

# ★ இரதோற்சவ சிறப்பு மலர் ★

வட்டுக்கோட்டையிலுள்ள ஆலயங்களுள் மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்த ஆலயம் வட்டுக்கோட்டையில் எழுந்தருளியிருக்கும் வீரபத்திர சிவபெருமான் ஆலயமாகும். இத்தகைய பெருமை வாய்ந்த இவ்வாலயம் யாழ்ப்பாணத்துக்கு மேற்கே ஆறு மைல் தூரத்திலுள்ள வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள

# இன்று தேர்த்திருவிழா

முப்பதுக்கும் அதிகமான ஆலயங்களை தன்னகத்தே கொண்டுள்ள இவ்வூரின் மத்தியிலே அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் வடகிழக்கு எல்லையில் முனியப்பர் ஆலயமும், வடமேற்கு எல்லையில் இலுப்பையடி முத்துமாரியம்மன் ஆலயமும், தென்கிழக்கு எல்லையில் வீரபத்திரர் ஆலயமும் தென்மேற்கு எல்லையில் சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும் முருகன் ஆலயமும் அமைந்திருப்பது இவ்வாலயத்துக்கு பெரும் சிறப்பாகும்.

அண்டினோர்க்கு வாழ்வளிக்கும் இவ்வாலயம் ஆதியில் வீரபத்திரர் ஆலயம் என்ற பெயரில் ''அப்பா'' என்று அழைக்கப்படும் அப்பாப்பிள்ளை அவர்களின் பாட்டனால் 1825ம் ஆண்டளவில் அமைக்கப்பட்டதாக அறியக் கூடியதாகவுள்ளது. சிறு கொட்டிலாக இருந்த இவ்வாலயத்தை 1903ம் ஆண்டு அப்பாப்பிள்ளை அவர்கள் பிரமாண்டமான கட்டிடத்தைக் கட்டி திருச்செந்தூரிலிருந்து கொண்டுவந்த 'சிவலிங்கம்' ஒன்றை மூலஸ்தானத்தில் வைத்து வீரபத்திரர் ஆலயம் என்ற பெயரைக்கொண்ட இவ்வாலயத்துக்கு வீரபத்திர சிவபெருமான் என்ற பெயரைச் சூட்டினர். இப்போதும் இவ்வாலயத்தை வீரபத்திர சிவபெருமான் என்றே அழைத்து வருகின்றனர். இவ்வாலயத்தின் நிர்வாகம் பரம்பரை பரம்பரையாக அப்பாப்பிள்ளை அவர்களின் குடும்பத்தையே சார்ந்ததாக இருந்து வருகின்றது. அப்பாப்பிள்ளையின் மகன் கந்தரின் நிர்வாகத்திலும் கந்தர் இறந்த பின்னர் கந்தரின் பிள்ளைகளான வைத்திய கலாநிதிகளானகுமாரசாமி, காசிப்பிள்ளை ஆகியோரின் நிர்வாகத்திலும இராசவைத்தியர் என பட்டம்பெற்ற குமாரசாமி அவர்கள்இறந்த பின்னர் காசிப்பிள்ளை அவர்களின் நிர்வாகத்தில் தற்பொழுது நடைபெறுகின்றது. இவருடைய நிர்வாகத்தில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதுடன் மிகச்சிறப்பான முறையில் திருவிழாக்கள் மற்றும் வைபவங்கள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் மிகச்சிறப்பாக திருவிழா நடைபெறுவதும் இவ்வாலயத்திற்கு தனிச்சிறப்பாகும்.

இன்று இவ்வூர் மக்கள் நோய்நொடியில்லாமல் சீரும் சிறப்புடனும் வாழ்வதற்கு இவ்வாலயமே காரணமாகும். இவ்வாலயத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் அண்மையில் இடம் பெற்ற விமானத்தாக்குதலி



னால் முற்று முழுதாக சேதமடைந்துள்ளது. அன்னதான மண்டபத்தின் திறப்புவிழா நடைபெறுவதற்கு முன்பே சேதமடைந்தது பெரும்கவலையாகும். கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இராஜ கோபுரவேலைகளும் முடிவடையாமல் உள்ளது. சேதமடைந்த அன்னதான மண்டபத்தை புதிதாக கட்டி எழுப்ப வேண்டியதும், முற்றுப்பெருத இராஜகோபுர வேலைகளை முடிவடையைச் செய்வதும் இவ்வூர் மக்களின் தலையாய கடமையாகும்.

பலவழிகளிலும் சிறப்புப் பெற்றசிவபெருமானின் தேர்த் திருவிழா இன்று மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. இன்று சிவபெருமான் உமாதேவியாருடன் பக்தர்களுக்கு காட்சிதரும்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இன்று அலங்கரிக்கப்பட்ட தேரில் எம்பெருமான் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழபவனிவரும்பொழுது பக்தர்கள் பலர் காவடி ஆடியும் பக்திப்பாடல்கள் பாடியும் கற்பூரதீபங்கள் ஏற்றிக் கொண்டும் ஆண்கள் பிரதட்டை செய்துகொண்டும் பெண்கள் அடி அழித்துக் கொண்டும் செல்வர். இவர்கள் போடும் அரோகரா ஒலி வானைப் பிளக்கும் வேண்டிய வரம் அளிக்கும் எம்பெருமானின் பாதம் பணிந்து அனைவரும் அவன் அருள் பெறுவோமாக. நாளை நடைபெற இருக்கும் தீர்த்தத்திருவிழாவின்போது ஆடல்வல்லானின் அற்புதத் திருக்கோலம் காண பக்தர்கள் பல பாகங்களில் இருந்து வந்து ஒன்று கூடுவது இங்கு குறிப்பிடத்தக்கது.



மலர்த் தொகுப்பு:
அ. கதிர்காமநாதன்
(சித்தன்கேணி நிருபர்)


தேன்மலர்ச்சோலை வளர்திருநிறைந்த வட்டூரில்
கோள்தில்லை மன்றுடும் கூத்தன் விசுவேசன்
மான்விழியால் மங்கை விசாலாட்சி அம்மையுடன்
தான்புகுந்து தேரேறித்தருங்காட்சி அற்புதமே

**வட்டு. சிவன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்**
வட்டுக்கோட்டை.

''வட்டூரில் குடிகொண்ட விசுவேசர் அருளால்
வையகமே துயர்தீர வாழ்த்திடுவோம் வாரீர்''

**வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம்**
வட்டுக்கோட்டை
தரமான மிளகாய்த்தூள், கோப்பித்தூள்,
மோர்மிளகாய், வடகம் சத்துணவு
ஆகியவற்றுக்கு இன்றே நாடுங்கள்

''சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை''

**அபிராமி ரெக்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.
எண்ணற்ற ரகங்களில் இணையற்ற டிசைன்களில்
உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட நாடுங்கள்

'' தென்னாடுடைய சிவனே போற்றி ''

**வட்டு தொகுதி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்**
சங்கானை.
தரமான பனை வெல்லத்துக்கு இன்றே நாடுங்கள்

''என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி''

**லீலா பேக் கவுஸ்**
மார்க்கற், சங்கானை — சண்டிலிப்பாய்.
தரமான பிஸ்கட் தயாரிப்பாளர்கள்

''ஈசன் அடி போற்றி எந்தைஅடி போற்றி''

**ராஜராஜேஸ்வரி றேட்ஸ்**
சங்கானை.
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களை
நியாயவிலையில் பெற்றிட நாடுங்கள்

''போற்றிநின் பாதம் போற்றி நாதனே
போற்றி போற்றி''

**அ. கந்தசாமி அன் சன்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.
பலசரக்குகளை நியாயவிலையில் பெற்றிட
இன்றே நாடுங்கள்.

''தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி''

**சேக்கிள் சென்ரர்,**
பிரதான வீதி, சங்கானை.
fபான்சி பொருட்கள், பாட்டா பாதணிகள்,
அன்பளிப்புப் பொருட்கள். கவறிங் நகைகள்
மற்றும் அழகுசாதனப் பொருட்கள் யாவற்றையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளச்
சிறந்த ஸ்தாபனம்

''சிவலோக நாயகனார் தேரில் வாருண்டி''

**நேசன் பல்பொருள் அகம்,**
பிரதான வீதி, சங்கானை.
தரமான உருக்குத் தளபாடங்களுக்கும்
அலங்காரப் பொருள்களுக்கும்
விஜயம் செய்யுங்கள்.

''சிற்சபையில் ஆடும் ஐயன் தேரில் வாருண்டி''
தரமான போட்டோஸ்ரட் பிரதிகள்
கலர் வெள்ளை நிழற்படங்களுக்கு

**சிவாஸ் ஸ்ருடியோ,**
பண்டத்தரிப்பு.

''பாவ வினைகள் தீர்க்க அவன் தேரில் வாருண்டி''


**ராஜ்மோகன், யாழ்ப்பாணம்.**

விடையவனே விசுவேதா விசாலாட்சி அம்மையுடன்
சடையவனே தேரூர்ந்து சஞ்சலங்கள் தீர்த்திடுவாய்.

**கலைவாணி கல்வி நிலையம்,**
வட்டுக்கோட்டை.

கண்ணாரக்கண்டு நாம் களிப்பெய்தி வாழ்வோம்
காலமெலாம் அருளோடு பொருள் பெற்று வாழ்வோம்

**ஓர் அன்பர், சங்கானை.**



யாழ். முற்றவெளி 'மாவீரர் அரங்கில் 9ம் நாள் முத்தமிழ் விழா நிகழ்ச்சிக்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமைதாங்கி உரை நிகழ்த்துவதையும், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி பாரதி, மற்றும் 'சிவத்தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். படங்கள்: 'தேவா'.

# ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்து நாளை ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மண்ணில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு, அத்தியாவயப்பொருள் தடை, நிவாரணம் நிறுத்தம் ஆகியவற்றை எதிர்த்து மாபெரும் ஊர்வலம் ஒன்று நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கிறது

நாளைக் காலை 9-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகும் இவ்வூர்வலம், காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று ஸ்ரான்லி வீதியூடாக றக்கா வீதியை அடைந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் மகஜரை கையளித்த பின்னர் தொடர்ந்து கண்டி வீதி வழியாகச் சென்று யாழ். செயலகத்தில் அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும்.

இவ்வூர்வலத்தில் பெரும் தொகையான மாணவர்கள், தொழிலாளர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் சிறிலங்கா அரசின் மனிதாபிமானமற்ற செயலை உலகுக்கு வெளிக்காட்டும் வகையில் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பாதிப்புற்ற மக்கள் ஊர்வல ஒருங்கிணைப்புச் சபையினர் இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. [ஆ]

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

இராணுவ முகாமிலிருந்து அரை மைல் தொலைவில் இம் மோதல்கள் இடம்பெற்றதாகவும் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வவுனியாவில் குருக்களூர் என்னும் இடத்திற்கும் சின்னத்தம்பனை என்னும் இடத்துச்குமிடையிலுள்ள கிரமநாதன் குளம்பகுதியில் நிலைகொண்ட இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் காலை முன்னேறி மடுப்பக்கமாக வந்தபோது இருபகுதியினருக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினருக்கு உதவியாக இரு குண்டுவீச்சு விமானங்கள், இரு ஹெலிகொப்டர்கள், பயணிகள் விமானங்கள் ஒன்றும் சடும் தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதல்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் நான்கு படையினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன. இத்தாக்குதலின்போது படையினருக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

ரி. 56 ரகத் துப்பாக்கி 01.
203 ரக கைத்துப்பாக்கி 01.
இதற்குரிய எறிகணைகள் 06;
ரி. 56ஒன்றுரகத்துப்பாக்கி01

இதேவேளையில் இப்பகுதியில் தொடர்ந்தும் இரு பகுதியினரிடையேயும் பலத்த மோதல்கள் இடம்பெற்றுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தீர்த்தத்திருவிழா

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாதர்ஆலய தீர்த்தத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

நடேசர் அபிஷேகமும், ஆடல் வல்லானின் ஆடலும் வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது. (137)

## தலைவர் பிரபா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்துப் பாவலர்கள் பலர் தமிழ் நாட்டில் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். பாரதியின் குரு யாழ்ப்பாணத்துச்சுவாமியர் விபுலானந்தர் நூற்றுண்டு நடக்கும் இந்த வருடத்தில் முத்தமிழுக்கு விழா எடுப்பது சாலச்சிறந்தது.

தலைவர் பிரபாகரன் காலத்தில் எம்மை அர்ப்பணித்து சுதந்திரமாக வாழ்வதற்கு தமிழர் படைகள் எல்லைகளில் நிற்கவேண்டும். துப்பாக்கி வேலி நாம் போடவேண்டும். என்றுர். (152-56)

## இந்தியாவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக சட்டசபையிலும், லோக் சபாவிலும் அமோக வெற்றிபெற்றுவரும் இ. காங்கிரஸ், அ. தி. மு. க கூட்டணியின் வெற்றி குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு கூறினர். அவர் மேலும் கூறுகையில்:

இலங்கைப் பிரச்சனைக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தமே தீர்வாகும். சகல தமிழ் போராளிகளும் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்றும் கூறினர். இந்திரா காந்தியின் கொள்கையை காங்கிரஸ் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானல் மத்தியில் அரசமைக்க அ. தி. மு. க. ஆதரவளிக்கும் என்றுர்.

''உலகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழகம் என்றும் அவர்களுக்கு தாய் வீடுதான். ஒரு தாயிடம் எத்தகைய உரிமைகளையும் சலுகைகளையும் எதிர்பார்க்க முடியுமோ அத்தகைய உரிமைகளையும் சலுகைகளையும் தமிழக அரசிடம் எதிர்பார்க்கலாம், பெற்றுக் கொள்ளலாம்.''

தமிழருக்கு எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதனைப் பார்த்துக்கொண்டு தமிழக அரசு இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (சி)

## தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகளைக் கண்டித்தும் மற்றும் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடைகளைக்கண்டித்தும் இன்றுசெவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

கோப்பாய், பலாலி பயிற்சி கலாசாலைஆசிரியர்கள் இணைந்துநடாத்தும்இவ் ஆர்ப்பாட்ட பேரணிதிருநெல்வேலியிலுள்ள பலாலிஆசிரியர் கலாசாலையில் ஆரம்பித்து பலாலி வீதியூடாக யாழ் நகரை அடைந்து யாழ். செயலகத்தில் அரச அதிபர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படும். (க)

## காரைநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும், அவர்கள் நிலைபற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை என்றும் அங்கிருந்து வரும் கடிதங்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பி. வி. நரசிம்மராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றன.

திரு. நரசிம்மராவ் இம்முறை தேர்தலில் போட்டியிடாததால், இவர் பிரதமர் பதவியேற்கும் பட்சத்தில் அடுத்த ஆறு மாதத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறவேண்டிய ஒரு நிலையு. ஏற்பட்டுள்ளதென அரசிய ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

## வீரமரணமடைந்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா], 2வது லெப். ராமன் [பவன் கிருஷ்ண மூர்த்தி-ஓமந்தை], குணளன் [சுந்தரம் ரவிச்சந்திரன்-மடுக்குளம்], கபில்ரத் [ராமசாமி ஜோன் ஜேக்கப் [ஜஸ்ரின்-பாவற்குளம்] கப்டன் வரன் [கணபதிப்பிள்ளை குமார்-முருங்கன்], லெப் நதுலேஸ் [காளிமுத்து கந்தசாமி-புளியங்குளம்], லெப். செல்வன் [பரமதாஸ் விமலதாஸ் - பருத்தித்துறை], லெப். கபில் (மகேஸ் வரலிங்கம் சசிகரன்-ஏழாலை), லெப். ஜெராட் [சரவணமுத்து ஸ்ரீஸ்கந்தராசா-உசன்], 2வது லெப். ரவி (நடராசா கணேஸ்- காங்கேசன்துறை), 2வது லெப். நிஷாந்தன் [மாணிக்கராசா ஜெயராசா- சாவகச்சேரி], [யூதி இராசசேகரன்டியூக்-குருநகர்], மருத்தீன் [ஆறுமுகம் சித்திரவேல்- மன்னர்], வல்லவன் (கதிர்காமத்தம்பி ரவி-மன்னர்), ஜிம்கெலி [பா. ஜெயசிங்கம்-மட்டக்களப்பு], தீவிர ஆதரவாளர் ஜெயதாஸ் ஆகியோர் வீரமரணமடைந்தார்கள்.

மற்றும் கடந்த 14-ம் திகதி வவுனியாவின் பூவரசங்களப் பகுதியில் அரச படையினருடன் ஏற்பட்ட மோதலில் பிரேமன் (திலசவீரசிங்கம் தவேந்திரன்- கனகராயன் குளம்) ராஜின் (பொன்னுத்துரை கிரிகரன்- நாவற்குழி, ஆகிய போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்த போராளிகளுக்கு தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## ஆனையிறவிலும் மோதல்

ஆனையிறவு முகாமில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் விக்கி (தியாகராசாஉதயராசா கிளிநொச்சி) என்ற போராளி வீரமரணமடைந்தார். (க)

## அநுராதபுரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர். இதில் 5 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். 23 படையினர் படுகாயமடைந்தனர். இதனை அரசும் உடுதிப்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட படையினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளது. (சி

## லோக்சபா முடிவு

மொத்தம் - 543 இடங்கள்.
தேர்தல் நடந்தது 511
வெளியான முடிவுகள்: 348

| | |
|---|---|
| இ காங்கிரஸ் | - 186 |
| பி. ஜே. பி. | - 74 |
| ஜனதாதள் | - 21 |
| அ. இ அ. மு.க. | - 11 |
| தெலுங்கு தேசம் | - 09 |
| சி பி. ஐ. எம். | - 19 |
| சி. பி. ஐ. | - 05 |
| ஜார்கண்ட் முக்தி மோச்சா | - 05 |
| முஸ்லிம் லீக் | - 02 |
| ஏனைய கட்சிகள் | - 16 |

## பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம்

| | |
|---|---|
| மொத்த தொகுதி | - 30 |
| இ. காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணி | - 21 |
| தி. மு. க. | - 04 |
| ஜனதாதள் | - 01 |
| சுயேட்சை | - 03 |
| இ. கம்யூனிஸ்ட்கட்சி | - 01 |

## தமிழக சட்டசபை

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | - 234 |
| தேர்தல் நடந்தது | - 232 |
| அ. தி மு. க. | - 163 |
| இ. காங்கிரஸ் | - 61 |
| திருநாவுக்கரசு அணி | - 02 |
| தி. மு. க. | - 01 |
| பட்டாளி ம க. | - 01 |
| மார்க்ர்ஸிஸ்ட் கம்யூ. | - 01 |
| இந்திய கம்யூனிஸ்ட் | - 01 |
| ஜனதாதள் | - 01 |
| சுயேட்சை | - 01 |

## ராஜீவுக்கு 'பாரத ரத்ன' விருது

(புதுடில்லி)

இந்தியாவின் அதிஉயர் விருதான 'பாரத ரத்ன' விருது முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட உள்ளது. இது தொடர்பான அறிவிப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தால் வெளியிடப்பட்டது.

நாட்டுக்கு உயர்ந்த சேவை ஆற்றியதற்காகவே அவருக்கு இந்த விருது வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஜெயலலிதா வெற்றி

[சென்னை)

பர்கூர் தொகுதியிலும் காங்கேயன் தொகுயிலும் போட்டியிட்ட அ. இ அ. தி. மு. க. பொதுச் செயலர் செல்வி ஜெயலிதா வெற்றிபெற்றுள்ளார்.

## கருணாநிதி ராஜினாமா செய்வார்?

தி மு. க. தலைவரும், முன்னாள் தமிழக முதல்வருமான திரு. மு. கருணாநிதி தமது சட்டசபை பதவியை ராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாக பரவலாக செய்திகள் அடிபடுகின்றன.

தமிழக சட்டசபையில் தி. மு. க, சார்பில் திரு. கருணாநிதி மாத்திரமே வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## நன்றி நவிலல்

### பண்டிதர் ச சிதம்பரப்பிள்ளை

எமது பெரிய தந்தையாகிய பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களின் 15-6-91ல் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாப உரைநிகழ்த்தியும், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும் மற்றும் நேரில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

ப. ஆரூரன்
71/2, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(எ-4869)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81